# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 100

வகுப்பு - எட்டு

நேரம்: 2.30 மணி

---

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **10 × 1 = 10**

1. கற்றவருக்கு அழகு தருவது ________________
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) கல்வி
2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ________________
   அ) முதுமை ஆ) இளமை இ) வாய்மை
3. காட்டிலிருந்து வந்த ________________ கரும்பைத் தின்றன.
   அ) வேய்கள் ஆ) முகில்கள் இ) வேழங்கள்
4. நம்மை ________________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) மகிழ்வாரை
5. பானை ________________ ஒரு சிறந்த கலையாகும்.
   அ) வனைதல் ஆ) செய்தல் இ) சுடுதல்
6. அரசரை அவரது ________________ காப்பாற்றும்.
   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை இ) குற்றமற்ற ஆட்சி
7. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ________________ எல்லாம் முளைத்தன.
   அ) முத்துகள் ஆ) வித்துகள் இ) சத்துகள்
8. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ________________
   அ) பெருமழை ஆ) சிறுமழை இ) எடைமிகுந்த மழை
9. சேரர்களின் தலைநகரம் ________________
   அ) வஞ்சி ஆ) காஞ்சி இ) தொண்டி
10. 'ஆன் பொருநை' என்று அழைக்கப்படும் ஆறு ________________
    அ) காவிரி ஆ) அமராவதி இ) பவானி

**ஆ) சேர்த்து எழுதுக.** **2 × 1 = 2**

11. அ) பகைவன் + என்றாலும் ஆ) கயிறு + கட்டில்

**இ) பிரித்து எழுதுக.** 2 × 1 = 2

12. அ) கசடற ஆ) பெற்றெடுத்தோம்

**ஈ) பொருத்துக.** 4 × 1 = 4

13. அ) பண்பு - தன்கிளை செறாஅமை

ஆ) அன்பு - பேதையர் சொல் நோன்றல்

இ) அறிவு - கண்ஓடாது உயிர் வெளவல்

ஈ) முறை - பாடறிந்து ஒழுகுதல்

**II. எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி.** 4 × 2 = 8

14. சொல்லுக்கு பொருள் தருக.

அ) புத்தி ஆ) கிளை இ) வையகம் ஈ) வாரி

15. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) கலப்பில் ________________ உண்டென்பது இயற்கை நுட்பம்.

ஆ) 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ________________

16. 'மை' என்ற எழுத்தில் முடியும் சொற்களை எழுதுக.

17. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) கற்றவர்

18. கீழ்க்கண்டவற்றில் எது சரி / எது தவறு எனக் கண்டுபிடித்து எழுதுக.

அ) நத்தைக்கு நான்கு மூக்குகள் உண்டு.

ஆ) நரிகள் கூட்டத்துடன் வாழும் இயல்புடையது.

**III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.** 6 × 2 = 12

19. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.
20. திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
21. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
22. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
23. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
24. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
25. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
26. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

IV. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 3 = 15

27. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
28. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?
29. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?
30. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
31. உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
32. மழைச்சோறு எடுத்த பின் எவ்வாறு மழை பெய்தது?
33. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

V. **எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 6 = 6

34. காப்பியக்கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

VI. **மனப்பாடப் பகுதி.** 4 + 2 = 6

35. 'கற்றோர்க்குக்' எனத் தொடங்கும் 'கல்வி அழகே அழகு' பாடலை அடிமாறாமல் எழுதுக.
36. 'விடல்' என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

## இலக்கணப் பகுதி

VII. **சரியான விடையை எழுதுக.** 6 × 1 = 6

37. எட்டாம் வேற்றுமை ________________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

அ) எழுவாய் ஆ) விளி இ) பயனிலை

38. முருகன் ________________ உயர்ந்தான்.

அ) உழைப்பால் ஆ) உழைப்பை இ) உழைப்புக்கு

39. 'செம்மரம்' என்னும் சொல் ________________த்தொகை.

அ) வினை ஆ) உம்மை இ) பண்பு

40. சாலப் பசித்தது என்பது ________________ தொடர்

அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

41. விகாரப் புணர்ச்சி ________________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு

42. 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ________________

அ) இயல்பு ஆ) திரிதல் இ) கெடுதல்

**VIII. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

43. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

44. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

45. எழுவாய் வேற்றுமையை விளக்குக.

46. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**IX. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.** 5 × 1 = 5

47. (கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

அ) இடி ________________ மழை வந்தது.

ஆ) மலர்விழி தேர்வின் ________________ ஆயத்தமானாள்.

இ) அருவி மலையில் ________________ வீழ்ந்தது.

ஈ) தமிழைக் ________________ சுவையான மொழியுண்டோ?

உ) யாழ், தமிழர் ________________ இசைக்கருவிகளுள் ஒன்று.

**X. சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.** 5 × 1 = 5

48. அ) சான்றோர் எனப்படுபவர் ________________ களில் சிறந்தவர் ஆவார்.

ஆ) ஆற்று வெள்ளம் ________________ பாராமல் ஓடியது.

இ) இசைக்கலைஞர்கள் ________________ வேண்டியவர்கள்.

ஈ) தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு இல்லை ________________.

உ) திருவிழாவில் யானை ________________ வந்தது.

(மேடு பள்ளம், ஈடு இணை, கல்வி கேள்வி, போற்றிப் புகழப்பட,
வாழ்வு தாழ்வு, ஆடி அசைந்து)

**XI. மாறியுள்ள பழமொழிகளை சரியாக எழுதவும்.** 5 × 1 = 5

49. அ) ஐந்தில் வளையாதது பூனையாகுமா?

ஆ) அடி நாக்கிலே நஞ்சும் பத்தும் பறந்து போகும்.

இ) பசி வந்திட தொண்டனுக்கும் உண்டு.

ஈ) புலிக்குப் பிறந்தது ஐம்பதில் வளையுமா?

உ) உண்ட மயக்கம் நுனி நாக்கின் அமுதம்.

**XII. கடிதம்.** 5

50. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.